ஸ்ரீ

கண்ணன்றுணை.

பாலூர்

அமிர்தகவிராய ரவர்கள்

இயற்றிய

# கோகுல சதகம்.

திருப்பதி மலைபின்பேரில் மேலரதவீதி

யாதவ கோபால இராமாநுஜகூடத் ததியர்

நா. ஜெகந்நாத இராமாநுஜ

பிள்ளை அவர்கள்

கேட்டுக்கொண்டபடி

மதுரை புதுமண்டபம் புத்தக்ஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

[அணா 2

OFFICE OF THE … 29 SEP … MAD…

Q.22:417 N14 148241

ஸ்ரீ

கண்ணன்றுணை.



14821

# கோகுல சதகம்.

## காப்பு.

### கட்டளைக் கலித்துறை.

சீர்மேவு பாடியில் வாழண்டர் செல்வஞ் செழிப்புறவே
ஏர்மேவு கோகுல மேன்மைச் சதக மிசைப்பதற்கு
நீர்மேவு மண்ட சராசரம் யாவுமோர் நீள்சுடருங்
கார்மேவு முந்தியிற் காத்தான் கழலிணை காப்பதுவே. *

மணங்கொண்ட வேதன் முகத்திற் புயத்தில் வளர்குறங்கிற்
கணங்கொண்ட பாதத்திற் றோன்றிய நான்குங் கவின்பெறவே
பணங்கொண்ட பாம்பணை யானமிர் தூறுமிப் பார்தழைக்க
குணங்கொண்டு முன்வரு மன்பர்தங் கோத்திரர் கோகுலரே. (1)

அண்டங்க ளாயிரங் கோடியுண் டாக்க வலர்ந்தவிதழ்
முண்டக னாகிப் பராபரன் பாரில் முறைநிறுத்த
மண்டலத் தேவகி பால்வசு தேவன்கை வாய்க்கப்பெற்ற
கொண்டலை யேந்தி வளர்த்தோர்கள் பாடியிற் கோகுலரே. (2)

பழையானை யெட்டக் கரத்தானைத் தன்பதம் பற்றினருக்
கிழையானை யானைமுன் னேயெதிர் வானை யெழிற்கருணை
மழையானை ரோகணிப் பாலுதித் தானை மலிந்தவொரு
குழையானை யேந்தி வளர்த்தோர்கள் பாடியிற் கோகுலரே. (3)

திலவிப வண்டம் பகிரண்ட கோடியை நேர்படைத்து
நலமுள தாமரை நாபியிற் காத்தவந் நாரணற்குப்
பலவித மாகிய பூச்சூடு நூற்றெண் பதிபுரைக்கக்
குலவிய பாட லுரைத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (4)

மழவியல் பாக மடிமீ திருத்தி வனசமுகத்
தழகுந் திருவு மருந்திக்கண் ணலன்பு மானமறைப்
பழமிது வேயெனப் போற்றிய கண்ணனைப் பாரிற்றங்கள்
குழவியைக் காப்பிடு பாட லுரைத்தவர் கோகுலரே. (5)

தேறப் புவியின் மறையைக் கடைந்து திரட்டமுதம்
ஏறக் கரையினில் வைத்தது போல வெடுத்த தமிழ்
மீறப் பதின்மர்க ளுலா யிரத்தினு மெய்ப்புகழைக்
கூறச் சிறந்து வளர்வோர்கள் பாடியிற் கோகுலரே. (6)

பண்டாடி யதழ லாடியும் பாம்பின் படத்திலன்பு
கொண்டாடி யுமொன்று மாய்நின்ற மாலண்ட கோளமெல்லாம்
உண்டாடி யுங்கடு கொவ்வாத வாயி லுறியின்வெண்ணெய்
கொண்டாடி யுண்டு தெவிட்டச்செய் தாரவர் கோகுலரே. (7)

முறையாக நற்றவஞ் செய்திடு வோருடன் முற்றுநின்று
மறையாமற் றேவர்க்கு மாந்தர்க்கும் வேள்வி வகுத்தருளை
நிறைவாகத் தந்து மலர்வாச முற்று நிலைத்தசெல்வங்
குறையாத பின்னை யெனுந்திரு வீன்றவர் கோகுலரே. (8)

தொடுத்தகல் யாணத் தெருதேழ் கொடுநிற்கச் சூதச்சுரர்
எடுத்தெறி யத்தெய்வ வுருவாகி யோங்கிய வேற்றைவெல்ல
அடுத்துநங் கண்ண னிவரை யழைக்கவந் தகனடுங்கிக்
கொடுத்தா னுயிரைப் பிழைத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (9)

ஞாலங்கண் டோங்கிய நான்முகன் கண்ணுநற் றேவர்கண்ணும்
ஆலங்கண் டோடிய வயிராணி கேள்வற் கலர்ந்தகண்ணும
மூலங்கண் டோவெனுங் காண்பரி தான முகுந்தன்மணக்
கோலங்கண் டேகண் குளிர்ந்தோர்கள் பாடியிற் கோகுலரே.(10)

நளிமலர் நாப னயந்தண்ட ருய்ய நடுக்கடலை
ஒளிர்மலை மத்திற் கடைந்ததிற் றோன்றிய வொண்பொருளிற்
றளிரியல் பார்ந்த திருவைம ணந்துபின் றந்தமுதைக்
குளிர்ந்தன்பு கூர்ந்து கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே. (11)

வானென்ற சொர்க்கப் புரந்தரன் றானு மாலயனுந்
தேனென்ற சொல்லுமை கேள்வனு மற்றுள்ள தேவர்களுந்
தானென் றுலகுக் கரசரும் பூணத் தகாவிஜயக்
கோனென்ற மேன்பட்டங் கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே.

அடுக்குந் தொழிலவர்க் காகிய தேவிரு தாகப்பெற்றார்
எடுக்குந் தொறுமதி லேற்றமுண் டே யெங்க ணாரணனே
தொடுக்குங் கருணை புரிந்தே தனது சுடர்க்கரத்தாற்
கொடுக்கக் கருடக் கொடிபடைத் தாரவர் கோகுலரே. (13)

நற்றுஞ் சுருதியுங் காணாத நாரண னற்றுளபம்
பெற்ற திருவின் னகைபோன்ற மாரன் பிடித்தவம்பால்
முற்றுஞ் செயஞ்செய்த காலங்கனேயின் னமிர்துதவிக்
கொற்றந் தருமுல்லை மாலையைத் தாங்கினர் கோகுலரே. (14)

மண்டலந் தன்னி னிலனைந்து கூறதில் வண்மைபெறுந்
தண்டலை நன்னதி சார்மயி லானிரை தார்குருந்து
விண்டலத் தோர்மகிழ் வேய்ங்குழ லோசை விளங்குபைந்தேன்
கொண்ட வளந்தரு முல்லைத் தலைவர்கள் கோகுலரே. (15)

ஆவர்த் தனையுள்ள வெத்தலை யோகுடி யாய்த்தழைத்தோர்
மாவர்த் தனையுள்ள முல்லை நிலத்தர் மலர்நிறைந்த
காவர்த் தனையுள்ள யமுனையுங் காவிரி காளிந்தியுங்
கோவர்த் தனமலை யுள்ளோர்கள் பாடியிற் கோகுலரே. (16)

வேலாயு தம்பிடித் தான்முரு கேசன்வெள் வெற்புறைவோன்
சூலாயு தம்பிடித் தான்சசி காந்தன் சுடரும்வச்சிர
மேலாயு தம்பிடித் தான்கஞ்ச னேவிய மேதிக்கன்றைக்
கோலாயு தம்பிடித் தானுயர் பாடியிற் கோகுலரே. (17)

தலஞ்சுத்தி யாகவுந் தார்வேந்தர் சென்னி தரிக்கமுடி
நலஞ்சுத்தி யாகவு நானிலத் தாலய நான்மறையோர்
பலஞ்சுத்தி யாகவும் பதினெட்டு சுத்தங்கள் பண்ணவுநற்
குலஞ்சுத்தி யாம்பஞ்ச கௌவிய மீந்தவர் கோகுலரே. (18)

சுற்றிய பாரிலுண் டாகிய தோற்றஞ் சுகம்பெறவே
மற்ற முயற்சியில் வருவதுண் டோவளங் கூர்சதுர்த்தர்
பற்றிய தங்க டொழில்கடைத் தேறியப் பலனுறவே
கொற்ற நல்லேறு கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (19)

புழுங்கிய கோபத்தி லந்தகன் சாபம் பொறுத்தவங்கி
மழுங்கிய தன்னுரு வோடு மறைந்திட மன்னுயிர்கள்
அழுங்கிய போதினி லந்தணர் யாக மனைத்துஞ்செய்யக்
கொழுந்த னல்காட்டு மரணிதந் தாரவர் கோகுலரே. (20)

பிலமா யிலங்கையை வென்று கற்பாகிய பெண்ணரசை
நலமாக மீட்டு வரும்போது தண்டக நன்முனிவர்
பலமா யிராமனைத் தழுவ நினைக்கவப் பாடியினிற்
குலமாத ராகப் பிறக்க வளர்த்தவர் கோகுலரே. (21)

உண்டா கியபதி னாறாயிரம் பெண்ணை யோங்குகண்ணன்
கண்டான் கமலத் திருவொப்ப வேகலி யாணஞ்செய்யப்
பண்டான வூர்வலம் வாழ்நாக வல்லி பரிமளநீர்
கொண்டாடி யேழ்தினஞ் சோபனம் பாடினர் கோகுலரே. (22)

பண்டான வாய்மை நினைந்தே மலரயன் பாரதனில்
உண்டான கண்ணன் றிருவிளை யாட லுணர்த்தக்கன்றுந்
தொண்டான வாய ருடன்மறைத் தேகவுந் தோன்றுருவங்
கொண்டானை யன்புடன் கொண்டாண்ட செல்வர்கள் கோகுலரே.

பாடிக் கொணாத னெண்ணிரண் டாயிரம் பாவையரில்
நாடிக்கொண் டேயென்று தாவென்ற போதினி னானின்மையைத்
தேடிக்கொண் டேனெனக் கண்ணினிற் றோன்றுந் திருவுருவாய்
கூடிக்கொள் செல்வப் பதிபெற்ற பேறவர் கோகுலரே. (24)

நீட்டுற்ற சாய்கையின் சூர்மாவை வேல்கொடு நீக்கிவெற்றி
காட்டு முருகர்க்கு மேனாடு வான கனவிறைக்குந்
தேட்டுக் குரிய வினைநாடி யேற்றித் திருகுபுரிக்
கோட்டுத் தகர்பெற வீந்தவர் பாடியிற் கோகுலரே. (25)

சமர்தனிற் சூரனை வேல்கொடு தாக்கிச் சயம்புரிந்தே
அமரரைக் காத்தவன் பன்னிரு தோண்மறைத் தௌவைதன்னைக்
கமரரி முல்லையிற் காத்திருந் தேபரி காசஞ்செய்யக்
குமரனு மேதிகண் மேய்க்கப் பெற்றாரவர் கோகுலரே. (26)

மாரியி னேர்கொடை யீந்தோர்க ளௌவை மனங்குளிரச்
சீரிய வாடை கொடுத்தோர்கள் போசனஞ் செய்யநல்ல
மூரிய பொன்னிலை யீந்தோர்கள் பாரி யெனமொழிந்த
சூரிய வள்ள லுதித்தோர்கள் பாடியிற் கோகுலரே. (27)

தணவாத நீதி புரிந்தோர் மகுடந் தரித்தனந்தன்
பணமாகத் தாங்கிய சேரனுஞ் சோழனும் பாண்டியனுங்
கணமாகச் சோபனப் பந்தலிலே நின்று கையதனாற்
குணமாய் மணமிடக் கலியாணம் பெற்றவர் கோகுலரே. (28)

வடியாய்ப் புனந்துண்டு மூன்றர சாகிய மன்னவர்க்குத்
துடியாக மூன்று பழந்தா லாலவர் தோத்திரஞ்செய்
படியார்க் கெளியரு மிச்சிக்க நான்கெனும் பாடல்பெற்ற
குடியார் பெரிய கொடையாற் பெரியவர் கோகுலரே. (29)

தண்டா மரைப்பெண்ணை தாய்பெற்ற தாலுந் தரணிச்செல்வம்
உண்டான வாய்மை யுடைமை யினாலு முணர்ந்தௌவையார்
பண்டாங் குடியிற் பெரியோ ரெனச்சொன்ன பட்டறனைக்
கொண்டே பெரும்புகழ் கொண்டோர்கள் பாடியிற் கோகுலரே.

பணத்தா யிரஞ்சென்னிச் சேடனு மேத்தப் பகர்ந்தவிலக்
கணத்தான் மிகுந்தவ ரௌவையை யோர்சொற் கூறிவெல்ல
மணத்தா மரைக்கை மணிப்பொற் கடகத்தை வாங்கியவள்
குணத்தாற் கொடுக்கப் புனைந்தவர் பாடியிற் கோகுலரே. (31)

பிலமா மிராகவன் காதையைக் கம்பன் பெருகச்செய்ய
நலமா மதிலொரு சீரிற் சமுசய நாடவிடத்
தலமாந் திசைசொற் சரஸ்வதி சாற்றத் தயிர்கடையுங்
குலமாது மாகப்பெற் றாரவர் பாடியிற் கோகுலரே. (32)

தொடுத்தநற் கற்புடைக் கன்னகை கேள்வன் றயாதனாற்
கடுத்து வருகின்ற போதவள் கொங்கைக் கரம்பறித்து
விடுத்தவள் கூடற் பதியினி லாயர்பெண் வெண்ணெயப்பக்
கொடுத்த வரம்பெற்று வாழ்வோர்கள் பாடியிற் கோகுலரே. (33)

ஆடற் பதிக்கு நிகர்கடம் பாடவி யானதிலே
தேடற் கரிய பொருளைக்கண் டேதமிழ் செப்பியவர்
நாடத் தயவு புரிந்தே பின்பாக நடந்துவருங்
கூடற்பதிச் சொக்கை யேவல்கொண் டோரவர் கோகுலரே. (34)

நப்பிட வேயிடைக் காட்டேரி வீசனை நாட்டிவைத்துச்
சொம்பிடக் கண்டனன் பாண்டியன் பாதத் துணையில்விழ
அம்பிடு சென்னிய னன்பனைப் போற்றென வன்றரசன்
கும்பிடச் சொக்கரைக் கோவில்வைத் தாரவர் கோகுலரே. (35)

நாலா கலைக்கென்றும் வல்லவர் சோதனை நற்பலகை
மேலா யிருந்தான் கீழாகி நின்றிட மேன்மைபெற்று
நாலா நிறைகின்ற பேரெழு தாமன்முன் னற்றமிழாற்
கோலா கலச்சங்கம் வென்றோர்கள் பாடியிற் கோகுலரே. (36)

சங்கத்தை வென்றவர் மங்காத நீதி தமிழுரைத்தோர்
துங்கக் கஜேந்திர மோட்சமு மாயிரஞ் சொன்னவல்லோர்
எங்கட் கிறைமகிழ் பாகவ தமுமே ழாயிரமாய்க்
கொங்குற் றவாணி கடாட்சத்திற் செய்தவர் கோகுலரே. (37)

அம்போ ருகனு மறியாத மாய னவதரிக்கக்
கும்போத யன்றமி ழால்விண்ம ணேக்தக் குவலயத்துத்
தம்போல வாழ்வு தழைத்திடக் கஞ்சனைத் தாக்குபதக்
கொம்பான துற்கை யெனுஞ்சத்தி யீன்றவர் கோகுலரே. (38)

மதித்தே வருகின்ற பூதகி யாதி வருபகையை
மிதித்தேறி வென்று முனிந்தே வருகிற வேழத்தையும்
எதிர்த்தே மருப்பைப் பிடுங்கியுங் கஞ்சன்மு னேமிக்கண்ணன்
குதித்தே யுதைத்திடு காட்சிபெற் றாரவர் கோகுலரே. (39)

மாவா யிரம்பல முள்ள பராக்கிரம மல்குகஞ்சன்
மேவா யமபுர மேவிய பின்னர் விளங்கவெங்குந்
தேவாதி தேவ னெனவுக்கிர சேனனைச் சீர்பெறவே
கோவாய் மௌலி தரித்தோர்கள் பாடியிற் கோகுலரே. (40)

கஞ்சனைப் பெற்ற வுக்கிர சேனனைக் காசினியின்
மிஞ்சிய நீதி செலுத்தர சாக்கிப்பொன் வீதிவலம்
நெஞ்சினு வந்திவ ரைப்பதி னாயிர நீள்பெரியோர்
குஞ்சர மேற்ற வருவோர்கள் பாடியிற் கோகுலரே. (41)

ஞானக மாயக் குரூர ரழைக்கநன் மாமதுரைத்
தானகல் வீதியிற் கஞ்சனற் றாசுகள் தந்தியின்மேல்
ஆன பொதியைப் பறித்துப் பீதாம்பர மானவெல்லாம்
கோனகர் பார்க்கப் புனைந்தோர்கள் பாடியிற் கோகுலரே. (42)

ஒலிபெறு மேகங்க ளேழையு மேவ வுவரியெல்லா
மலிவுடன் மாந்திப் பொழிந்து வருந்தி மகபதிபான்
மெலிவினைக் கூறிட மேதினிக் கோவலர் மெய்ப்புகழைக்
குலிசனு மேத்தப்பெற் றாரவர் பாடியிற் கோகுலரே. (43)

கடையாய் மகரத்திற் செய்கின்ற பொங்கலை நாரணன்றன்
தடையாக வுட்கொண்ட தென்றறி யாமற் சதமகத்தான்
படையாக மேதங்க ளேழையு மேவப் பரனெடுத்த
குடையான கோவர்த் தனநீழ னின்றவர் கோகுலரே. (44)

மணமுற்ற முல்லை புனைவீர கோதன்ன மாயவனைப்
பணமுற்ற சேடனு மேத்த நினைந்து பலவிதத்தால்
உணர்வுற்று நாணப் பதினாயிரம் விப்ர ருண்ணவன்னங்
குணமுற்று மாய்த்தர லாற்றிரு வீன்றவர் கோகுலரே. (45)

மாதனங் கோடி மணிப்பணிப் பேழை மலர்மங்கைநேர்
சாதனச் சேடியர் நூற்றெண்மர் பெண்ணினிற் சார்சிவிகை
சீதனத் தேனு பதினா யிரம்பல சீர்சிறக்கக்
கோதனன் பெண்ணைக் கண்ணனுக் கீந்தவர் கோகுலரே. (46)

தவளமொப் பாமெனக் கட்டமிர் தாயர் தனையருடன்
உளமகிழ் மாயனுங் கொண்டே யமுனையி லுண்ணவக்கால்
வளமுடன் றங்க ளனமீந்து மாலுக் கவரமிர்தங்
குளவுங் கொடுத்துண் டகமகிழ் வோரவர் கோகுலரே. (47)

துடிகோத் திரமெனச் சொல்வார்க ளொன்றைச் சுதரிசனன்
அடிகோத் திரமிளை யாகும தோவன்று நாரதனும்
படிகோத் திரமனை யைந்து நிலத்தினும் பார்த்துவந்த
குடிகோத் திரமுடன் வாழ்வோர்கள் பாடியிற் கோகுலரே. (48)

அன்றுமை யூர்திரு வேங்கடன் சந்ததி யாரொருவர்
கன்றொடு காவியை முல்லையிற் காக்கும் குடும்பகலிற்
றின்றிட வந்திடுந் தேவாலமிர்தத்தை தினேதினமுங்
குன்றெடுத் தாருடன் கூடியுண் டாரவர் கோகுலரே. (49)

நன்றா கவதென்ற கோடான கோடிக ணல்லமிர்தங்
தின்றா ரதிற்பலங் கண்டதொன் றில்லைச்சிற் றாயர்க்கன்பி
னொன்றாய்க் கவளங் கொடுத்தத னாலுட லோடவற்குக்
குன்றாப் பதவி கொடுக்கப்பெற் றாரவர் கோகுலரே. (50)

மாகன கத்துரு வீன்றன காளிங்கன் வாழ்தடத்தி
னாகன கிற்றுரு வாகிய வாயர் நலம்பருகித்
தாக மகற்ற மயக்கிய வல்விடந் தான்முறியக்
கோகன கைக்கட் கருணைபெற் றாரவர் கோகுலரே. (51)

பூபால னஞ்செய்வ ராகுதிப் பாலனம் போந்துசெய்வர்
நாபால னஞ்செய்வர் நல்லமிர் தீந்து நளினமலர்
மாபால னஞ்செய்யு மார்பனு மிச்சிக்க வாழ்வுதரும்
கோபால னஞ்செய்வர் கோபாலர் கோவலர் கோகுலரே. (52)

தவமுள விண்டலத் துண்டான வண்டர்க்குத் தானமிர்தம்
உவகைய தாகவு முண்டிட வன்பி னுதவிசெய்தோர்
புவனமெ லாமிவர் புண்ணிய மேலம் பொங்குதலாற்
குவலயத் தண்ட ரெனநிகண் டோதிய கோகுலரே. (53)

உணத்தான் பிறந்த வுயிர்களுக் காரமிர் தூதவிபுகழ்
மணத்தா லவர்க்கு வழுவாமை யாலும் வழங்குநெறிக்
கணத்தானு முன்மநு வேந்த னறிந்து கனந்தந்திடுங்
குணத்தாற் பொதுவரென் றோதப் பெற்றாரவர் கோகுலரே. (54)

பூபாரந் தீரவுந் தன்கைக் கபாலம் புனனிறைய
மாபாரத முடித் தானென்றும் வெள்ளி மலைக்கடவுள்
ஙாபாடல் செய்தது நான்முகன் ரூனு நலமுணர்ந்து
கோபால னென்று வணங்குமப் பேர்கொண்ட கோகுலரே. (55)

தருமன் முதலியோர் தாங்கிய வேடந் தகுதியென்றே
பெருமைய தாக வறிந்த மெஞ்ஞானம் பெரிதுடையார்
இருமையுங் கண்ட சகாதேவ ராய ரின்னுருவே
குருகுலங் காக்குமென் றேற்றதனாற் சேட்டங் கோகுலரே. (56)

பாடற் குருகிமுன் னுடிருப் பாற்கடற் பள்ளிகொள்ளும்
தேடற் கரிய பொருளான நாரணன் றேவரைநீர்
நாடற் குரிய நரராக முல்லையி னாரணனுய்க்
கூடப் பிறக்க விளையாடல் பெற்றவர் கோகுலரே. (57)

ஆடவந் தோடுயிர் மாய்ந்திடு மூலன்ற னங்கத்திலே
காட வுயிர்புகுந் தேயவன் செய்து நயந்தபின்பு
தேடரி தானதன் னுடலிற் புகுந்திடுஞ் சித்திகற்றுக்
கூடுவிட் டேவசி சித்தன் மரபினர் கோகுலரே. (58)

ஆயிர நாமத் தவற்குச்செய் பூசனை யானவெல்லாம்
நேய மிவர்கடம் பேரரு ளானிறை வேற்றலல்லாற்
றாயினு நல்ல சிதம்பரந் தன்னிற் றமனியப்பொற்
கோயி லமைத்துப சாரஞ் செய்தாரவர் கோகுலரே. (59)

நிலவிய வெள்ளிக் கிரியான கத்தி னிணைந்துநிதம்
கலமுள வேணுவிற் கானங்கள் பாடி நயந்துருகி
அலமர வீங்கிய வானுயர் தோன்று மருளுருவாங்
குலமெனும் பேறதைப் பெற்றோர்கள் பாடியிற் கோகுலரே. (60)

பிரதோடஞ் சேவிக்கும் பெண்மக வேந்தும் பெருமைகண்டு
இரமா மனையிற்சென் றேசமைத் தாளச் சிறுவனப்போ
மறவாமற் பூசனை மண்வீட்டிற் கோவிட மாதுமதைக்
குறையாற் றுடைக்க வதுலிங்க மாக்கிய கோகுலரே. (61)

முழுத்தவர் போற்று மரன்செய்த முப்புர வெஞ்சமரில்
வழுத்துநற் றேரொன்று வானோ ரமைக்க வதிலிருந்து
மழுக்கரன் வெற்றி பெறவே மகிழ்வுடன் வானந்தொடர்
கொழுத்த நல்லேறு கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (62)

கவலை யில்லாமற் சகத்துயிர் வாழக் கடவுளருந்
தவறிலை யாகத் தருமங்க ளோங்கவுந் தானறிந்தே
உவகைய தாகவு மெங்கு நிறைந்தவ னொண்டொடியைக்
குவலய மாவென வாண்டோர்கள் பாடியிற் கோகுலரே. (63)

மீறிய ஞானச் சுடர்விளக் கேற்றிய மெய்புணர்விற்
றேறிய மாதர் சுவையாற் சுகித்துச் செயல்பெறவே
ஏறிய கோடி யுகம்போய்த் திரித யுகமதனில்
கூறிய மூல ரவதரித் தோங்கிய கோகுலரே. (64)

நலமான பூசையிற் சிற்றாயர் கேட்டிட நல்லமிர்தம்
இலதேகென் றந்தணர் சீறிய போதவர்க் கீவதுவே
புலனாகும் வேள்வியி லென்னுகு மென்றிவர் பண்பையெல்லாங்
குலமாதர் கூறி வணங்கிய பாடியிற் கோகுலரே. (65)

உரைகட வாதவ ரன்பாளர் மாதவ னோரிரண்டு
மரைமலர்ப் பாத மறவாத சிந்தையர் மாயவற்குத்
திரையுறு பாற்கட லீந்து தயிர்நெய் செறியவென்றுங்
குரைகடன் மூன்று மமைத்தோர்கள் பாடியிற் கோகுலரே. (66)

ஆடலுண் டாகு மயிலு மரவமு மன்பிலொன்றி
நாடநின் றேயுற வாடவுங் கேட்டிடு நான்மறையின்
பாடலென் றேவிண் ணவருட் களிக்கப் பசுப்புலியும்
கூடநின் றேற்கவும் வேணிசை கூறுவர் கோகுலரே. (67)

வளந்தையி லேபிறை போலே தருமம் வளர்ப்பவர்கள்
தளர்ந்தவர்க் கேகடுக் காட்டினிற் பாலனந் தான்கொடுக்க
உளந்தய வானவ ரியாவரு முண்ணு முயர்குலத்தோர்
குளந்தையில் வந்தவர்க் கேவிருந் தேசெய்வர் கோகுலரே; (68)

அடுத்தோர் பசுவினுக் கோர்பிடி புல்லை யளித்தவர்கள்
நடுத்தா ரணியினற் பாக்கியம் பெற்றுநற் சேய்கள்பெற்று
எடுத்தோங்கு சொர்க்கம் பெறுவா ரிவரெத் தனைபிடிபுல்
கொடுத்தா ரிவர்பல னளவிற் குறைவிலர் கோகுலரே. (69)

நறுந்திரை வீசிய மூன்றரை கோடி நதிப்பலனும்
அறிந்தன வேதத்தி னங்க முரைத்த ததிசயமாய்ச்
செறிந்திவர் தேனுவும் நீருண்டு வால்சுற்றச் சிந்துபுனற்
குருந்துளிக் கொப்பில்லை யென்றும் புனிதர்கள் கோகுலரே. (70)

மீறத் தவத்தருந் தேவரு நல்வரம் வேண்டத்தரும்
பேறெப் புவிதனி லுண்டென் பராணிப் புனிதர்க்கிதந்
தேறப் பலருந் தெளிந்தன்பு கூர்ந்துசெய் தாலுடனே
கூறப் பலிக்குநல் வாக்குள்ள பேறவர் கோகுலரே. (71)

வடிவி லுதித்த பிராமண ராதி வருணங்களும்
படியி லுதித்தபின் நூல்பூண் டிருபிறப் பாளரென்பார்
நெடியவன் றன்னுருப் போலே யகத்தி னினைக்கவன்று
குடிமிமுந் நூலுடன் றன்பிறந் தாரவர் கோகுலரே. (72)

சம்புவி னற்கனி சிற்றாயர் கண்ணனுந் தான்பருக
அம்பொ னிறைந்தன கூடையெடுத்தவ ளாயர்முன்பாய்த்
தம்பிய ரால்வந்த தென்றன ணீகொண்டு தான்செல்கெனக்
கும்பிட்ட வன்செல வாசையில் லாதவர் கோகுலரே. (73)

தலைமைத் தனையுண் டதற்கேற்ற பூசனை தானதர்மம்
பலனைத் தருங்கோடி கன்னிகா தானங்கள் பண்ணிக்கற்பின்
நலமுற்ற கோசலை போலுமசோதை நகர்க்கழகாங்
குலபத்னி மாதருட் பெற்றோர்கள் பாடியிற் கோகுலரே. (74)

மரகத மேனிநம் மாயனும் பால்வண்ண மாதவனுங்
கரசத மாகிய வாயருங் கந்துகங் கண்டடிக்க
உரமிக வெற்றி கவரு மிருவரு முவந்துவந்து
குரகத மேறி விளையாடல் செய்தவர் கோகுலரே. (75)

மண்டலத் தெங்கு முளதாம் பலநகர் வாழ்வதிலே
திண்டிறற் கஞ்சன் வராததொன் றில்லைசொற் சேர்நகரில்
அண்டப் படாத வரம்பெற் றுநாளு மணங்கினருட்
கொண்டுற்ற நற்றிரு வாய்பாடி வாழ்பவர் கோகுலரே. (76)

சவலை விடமுனம் மாயோன் விண்ணோர்க்குக் கடைந்தமிர்தம்
உவகைய தாக வொருபாற் கடலி லுதவிசெய்தான்
தவளித பாற்கடத் தேதினந் தோன்றுந் தனியமிர்தாற்
குவலயந் தன்னிற் கவலைக டீர்ந்தனர் கோகுலரே. (77)

மேவிய தேவ ரனைவரு ரோமங்கள் வீசியவால்
தேவியு மாயன் மடிநான் முகன்முலை சேர்சுருதி
ஆவியு மீச னடித்தலந் தீர்த்த மதின்மயமாங்
கோவினப் பாலனஞ் செய்வோர்கள் பாடியிற் கோகுலரே. (78)

மாறுப் பரிவுட னுயருங் கண்ணனு மாசுணவர்
ஆறு மெனச்செல வப்புறம் போக்கில்லை யாகநின்று
பேறுய்ப் பசுத்தங்கள் பால்பாதி யீயப்பெற் றேயிரண்டு
கூறுய்க் கிழிக்க மகிழ்வோர்கள் பாடியிற் கோகுலரே. (79)

அடக்க முடையா ரரிய தரும மறிந்துசெய்வார்
நடக்கு மநுநெறி தாண்கட வாதவர் நாரணர்க்குத்
தொடுக்கும் விளாவினி லாயிரந் தீவர்த்தி தோன்றநெய்யே
கொடுங்க வரங்கர் கருணைபெற் றாரவர் கோகுலரே. (80)

சேவிந்து பூணு மரனயன் றனுஞ் சிறந்தொன்றதாய்ப்
பூவிந்த மாக வளாந்தோன் திருப்பெயர் போற்றுதற்கு
நாவிந்த மாக வனந்த மறைகள் நவிலவன்போற்
கோவிந்த பட்டந் தரித்தோர்கள் பாடியிற் கோகுலரே. (81)

தொட்டி ரடிக்கொண்டு மண்டலம் விண்டலஞ் சூழ்ந்தளந்த
நெட்டிகற் பாதம் மலதரம் வைக்கு நெடுமனையோர்
பட்டிசு ரர்க்கபி டேகமுலைகுடப் பால்சொரியக்
கொட்டிலில் வாழ்பசு வீந்தவர் பாடியிற் கோகுலரே. (82)

நூற்றெண் டிருப்பதிக் காலையிற் பூங்குட னூற்றப்பத்தோ
டேற்றநற் பாற்பசுப் பூசனைக் கேற்றன வெப்பொருளும்
நேத்தி பெறவைத்து மார்க்கங்கள் தோறு நிறைந்தசத்ரங்
கோத்திரம் வாழவைத் தார்நந்த கோன்குலங் கோகுலரே. (83)

சாத்திரக் கங்கைப் புனல்படி வோர்கட்குச் சார்யமுனை
மாத்திர மப்பல மாடா விடிற்குறை வந்ததுண்டோ
நேத்தி யமுனையுங் காளிந்தி கோதா வீரிநினைக்கக்
கோத்திர மோங்கிக் குருவாழ வாழ்கின்ற கோகுலமே. (84)

வருதேச காலமி னுத்திரம் போய்வரு மாயவர்க்குத்
தருதேசி பால்சுடத் தன்கையில் வாங்கித் தயவதனால்
அருளேற வூக வனைத்தாய னூரென் றரங்கர்புகல்
குருதேசி கனைப்பணி வோர்கள் பாடியிற் கோகுலமே. (85)

களிவா கனம்பெறக் கடல்கடந் தேயவர் நன்மைமனத்
தெளிவாகி யெங்கள் பங்கனைச் சேர்ந்தகஞ் சேருதற்கு
நளிர்மா மலர்முல்லை யாயர்க் கியற்கைநல் வாசமுறுங்
குளிர்வாச சாந்தங் கொடுக்கப் புனைந்தவர் கோகுலமே. (86)

நன்றாள் புவியி லிவர்தேனு நின்றது நாகத்தினும்
அன்றாள வந்த திவர்தேனு வேயகல் பூவுலகில்
என்று முழவ ரிவர்தேனு வானுர மேத்திவைத்துக்
குன்றாத செல்வங் கொடுத்தோர்கள் பாடியிற் கோகுலமே. (87)

பண்டாங் தவம்புரி யோர்விந்தி யாதரர் பற்பமின்னை
உண்டான சக்கரத் தேயமைத் தேயுயர் யோகமிகக்
கண்டான் விஜய னற்சேய் பிரவிடை காசினியிற்
கொண்டா னாபதி தங்கோத் திரமெனுங் கோகுலமே. (88)

உள்ள புவியிற் பொருள்படைத் தென்ன வுதவுபுனற்
பள்ள நிறைந்த தடாகமுண் டாக்கிப் பரிந்துநிதி
அள்ளிக் கொடுத்து மிவர்தேனு வாய்வைத் தருந்துபுல்லைக்
கொள்ள வெண்ணுன்கு தருமம் புரிந்தவர் கோகுலமே. (89)

இடிக்கட்டி செய்துமின் னில்லாமல் மேகங்க ளெங்குமின்றிப்
படிக்கட்டி யாண்டு பனிரண்டு வாக்கியம் பண்ணுமன்னர்
மடிக்கட்டி மேட மதினுன்கு கோட்கண் மயங்கவென்று
கொடிக்கட்டிக் கொண்ட வீரர்கள் பாடியிற் கோகுலமே. (90)

தலமேழில் மாயன் சமயம் வகுத்திடத் தான்குருவாய்
உலகூடு நான்கு வருணமு மோங்கி யொளிபெறவே
கலமாய் நடுவில் வைணவ நாரண நல்லுருவின்
குலமேவு வைணவ ராகவத் தாரவர் கோகுலமே. (91)

14821
...ன்னை-600 008.

நலத்தன யாகங்க ளுள்ளன செய்து நளிர்புனல்சூழ்
தலத்தைப் புரக்கின்ற கோனுதி நந்தன் சந்ததியாய்ச்
சொலப்புகழோங்க மநுநெறி யோங்கிடச் சூழ்ந்தமதிக்
குலத்தினி லாதவர் தங்கோத் திரமெனுங் கோகுலரே. (92)

நலத்தைப் பொதுப்பி யருளொன்று நாற்குல நன்குறலாற்
பலத்தி லதிக மிவர்பஞ்ச கௌமியம் பார்கொளலாற்
றலத்தை விளக்கும் புனித மிவர்பொருட் டானென்றதாற்
குலத்திற் றிலதமென் றோதப் பெற்றாரவர் கோகுலரே. (93)

மூலத் திருமரு மார்ப னுருவின் முளைத்தவர்நற்
சீலத்தர் தேனுவைப் பாலனஞ் செய்பவர் செந்திருமுற்
காலத்திற் பின்னைப் பிராட்டி யெனப்பெற்ற கருணையெனும்
கூலத்தர் ஞானத்தர் மேலுற்ற பாடியிற் கோகுலரே. (94)

மறையோது வார்முத லாலாம் வருணங்கண் மாண்புபெற
முறையாக வூணி னறுநெயும் பாலு மோர்பிறவும்
நிறைவாக வேண்டிய வெல்லா முதவிய நீதியினாற்
குறையாத செல்வ ரிவரென்ற பேறவர் கோகுலரே. (95)

நாவில னங்கள் புசிப்போர்க்குச் சுத்தியும் நல்கவல்லார்
பூவில் விளங்கிய தேவா லயங்களைப் போற்றிடவே
மேவிய திங்களும் வெய்யோனும் போல விடிவிளக்குக்
கோவில் விளங்கநெய் யீந்தவர் பாடியிற் கோகுலரே. (96)

நெறிபெறு செய்க்கும் புகர்க்குநல் லாட்சி நிலைக்கவென்றுஞ்
செறிபல மான மணிபணி ரண்டினுஞ் செய்முதலாய்
அறிவரி தாமக மேரு முகட்டி லரிதிசையிற்
குறிபெற மேட மிடபம்வைத் தாரவர் கோகுலரே. (97)

காதா லுணர்ந்திடுஞ் சோதிடங் கூறுங் கணயோகமும்
வேதாக மங்கள் விளக்கிய யோகமும் வேறுளதும்
போதா தெனமுன் வியாச ரறிந்திவர் போற்றவளர்
கோதாளி யோக மதிகம தாம்பெற்ற கோகுலரே. (98)

நெறியாற் சகத்தினிற் கீர்த்தி பெற்றோர்க ணிறைசெல்வரென்
றறிவாளர் பேசிய தல்லாம லன்பரென் றுண்மைபெற்றோர்
செறிவான வேதத்தி னங்க மறிந்து செயலையெல்லாங்
குறியா யுரைத்தமிர் துண்டோர்கள் பாடியிற் கோகுலரே. (99)

செழும்பாரின் முன்னங் கொடாமற் பிறந்து திரிபவர்க்கு
மழுங்காத செல்வம் வருவதுண்டோ வதின் வாறறிந்து
தொழும்பாய் வறுமைத் துயர்தாங்கிச் சித்தஞ் சுழல்பவர்க்குக்
கொழும்பா லனங்கள் கொடுக்குந் தியாகிகள் கோகுலரே. (100)

அடியிற் பெரிய துலகளந் தானடி யாதிமன்னர்
முடியிற் பெரியது சோழன் றிருமுடி முத்தமிழ்சேர்
படியிற் பெரியது பாண்டியன் சங்கமிப் பாருலகிற்
குடியிற் பெரியது கோபாலர் தங்கள் குலக்குடியே. (101)

தரங்க மெறியுந் திருப்பாற் கடலிவர் தன்மனைபோல்
அரங்கந் துயிலும் பிரானரு ளாலண்ட ராய்த்தழைத்தார்
வரங்கள் பெறுகின்ற கோகுலப் பாவையர் மகிழ்வடைய
உரங்கொள் பெரும்புகழ்கொண்டார்குருவரு ளோங்கவுமே. (102)

## வாழ்த்து.

குருவாழி கோவலர் கோக்குடி வாழி கொடிக்கருட
உருவாழி முல்லை நிலம்வாழி யாக்குல மோங்கிவளர்
திருவாழி பாடி நகர்வாழி வெற்றிச் சிறந்தமுல்லை
மருவாழி மாமறை வாழி தமிழ்நிதம் வாழியவே.

## கோகுலசதகம்

முற்றிற்று.

---

ஸ்ரீ

ஸ்ரீகண்ணபிரான்றுணை.

# கோவைவசியமாலை.

## கலி வெண்பா-

பார்பூத்தவுந்திப் பரந்தாமன் றன்னருள்சேர்
சீர்பூத்த கோவை சியமாலை—ஏர்பூத்த

செந்தமிழாற் றேர்ந்தபடி செப்புவே னிவ்வுலகில்
வந்தமிர்த முண்டளிகள் வாழ்மலர்மேல்—சந்ததஞ்சேர்

நான்முகனார் புத்திரரா நான்கு வருணத்தாரின்
மூன்றாங் குலத்தினுண் முப்பிரிவாய்த்—தோன்றிய

கோவசியர் பூவசியர் கூறுந் தனவசியர்
மூவசியர் தம்முண் முதற்குலத்தார்—பூவுலகில்

குல்லையணி தெய்வமாங் கோவிந்தன் வாழ்கின்ற
முல்லை நிலத்தின் முதன்மையார்—எல்லையில்

கோப்புரத்த லேருழுதல் குன்றாப் பொருளீட்டல்
வாய்ப்புடைய முத்தொழிலும் வாய்க்கினும்—காப்புடைய

நல்லான் களைக்காத்து நாடோறுஞ் சீவிப்போர்
எல்லா வுலகும் இசைபடைத்தோர்—நல்லருள்சேர்

தாயிணையாம் யாதவர்கள் தம்பெருமைச் சேடன்றன்
ஆயிர நாவாலு மறையவொணா—தாயினும்

கிஞ்சித் தெடுத்துக் கிளத்துகிறேன் கேளுங்கள்
சஞ்சிதங்கள் நீக்குஞ் சகத்தீரே—வஞ்சியர்மேல்

நட்புறு வண்டரிஷி நன்மரபில் வந்ததனால்
பெட்புடனே யண்டரெனப் பேர்படைத்தார்—இட்டமுற்று

ஆவினங்கள் பல்குவித்த லானெய் தயிரளித்
தோவில் பொருளீட்டும் உத்தமத்தோர்—தாவில்சீர்

காட்டி லுறு முல்லைக் களிக்கரத மீந்துபுகழ்
நாட்டினார் நந்தப்பேர் நாட்டினார்—தாட்டியின்றி

ஆகுலத்தார் வந்தாலு மன்புடனே யாதரிக்குங்
கோகுலத்தார் மெச்சுகின்ற கோகுலத்தார்—மாகுலவு

அத்தனத்தார் பொன்னடியி லன்புசெய்யா தீட்டியபா
வத்தனத்தார் சேராக்கோ வத்தனத்தார்—நித்தநத்தா

போற்றினார் யாரேனும் போந்தவிடாய் தன்னை
யாற்றினார் மீள்யமுனை யாற்றினார்—கூற்றன்

தடியாரைப் போன்ற சழக்கர் தமக்குக்
கொடியார் கருடக் கொடியார்—படியினில்

காலையா ருச்சி கருதந்தி முப்பொழுதும்
மாலையார் வங்கொள்முல்லை மாலையார்—வேலைபோல்

மேவினார் தங்கண் மிடிதீர வேயளிக்கு
மாவினார் திவ்யபரி மாவினார்—நாவினால்

பூரணத் தாதாவென்று போற்றுவோர் சஞ்சலநீ
வாரணத்தார் திண்கான வாரணத்தார்—தாரணியில்

ஞாட்பறிவு சால்பெரியோர் நன்மைதரு மான்பெல்லாங்
கோட்பறையார் சீரேறங் கோட்பறையார்—வேட்புடனே

பாலினா காத்துப் பாவறத்தை யேவேலி
கோலினார் மால்சொற்செங் கோலினார்—கோலியே

வைக்கோல் செழுமுஞ்சி வான்மயிற் பீலியிவை
கைக்கோலாக்கொண்டுபசுக் காத்தளித்தோர்-மெய்க்கோலின்

நாடிக் கறவைகட நாமங்க ளிட்டழைத்துப்
பாடிக் கறக்கின்ற பான்மையார்—தேடிவரும்

சேயைப்போல் மந்தையினிற் சேர்ந்தோர்க்குக் கேளாமுன்
தாயைப்போல் பால்கொடுக்குந் தாட்டிகர்—தூய

நடுக்காட்டு த்யாகியென நாடிவந்தோ ருண்ணத்
தடுக்கா தனமளிக்குந் தக்கோர்—மடுக்கவே

தேம்பெற்றப் பாலீந்தோர் சேதனர்பால் ஞானந்
தாம்பெற்று வாழுந் தகைமையோர்—ஓம்பியே

வாசனை வளத்த வனத்தின்முன் னாட்காளி
தாசனை வளர்த்தெடுத்த தண்ணருளார்—மாசற்ற

ஆசையெட்டும் போற்றவிந்தற் காண்டிலோர் நாளன்பாய்ப்
பூசையிட்டு வாழும் புகழுடையோர்—ஓசையறி

கண்ணில்லான் பிள்ளை கவலையுற மாட்டிநரன்
எண்ணில்லா வான்றிருப்ப இட்டமுற்றோர்—மண்ணினில்

நல்ல விராட னகரினிற்சா தேவனான்
கொல்லையில்மேய்த்திடவே கோல்கொடுத்தோர்-நெல்வயலார்

பொன்னேரி யாய்ப்பாடிப் புற்றினிலான் பால்விட்டுத்
தன்னேரில் கிர்ஷ்ணன்வரத் தான்செய்தோர்—நன்னேயம்

உற்றபசுக் கூட்டமுய்ய வோங்குசநி வாரத்தில்
புற்றிலான் பால்விட்டுப் பூசிப்போர்—கற்றவர்சேர்

மாமாதை யூர்தன்னில் வாழிலிங்கந் தோன்றிடவே
ஆமா பொழிபயந்தா னன்றளித்தோர்—நேமார்

வருமமா வாசைமுதல் மாவிரத நாளில்
தருமமாப் பாலைத் தருவோர்—உருவாய்

மரிக்குங் காலத்து மரித்த மறுநாளும்
பருத்தபசும் பாலைப்பா விப்போர்—செருக்குடனே

இக்குவல யத்தோ ரினிமையுற வெண்ணெயளி
செக்குக் கெருதளிக்குஞ் செம்மையோர்—பக்குவமாய்

கல்யாணப் பிள்ளைக்குங் கல்யாணப் பெண்ணிற்கும்
நல்யாணர் மேவப்பால் நல்குவோர்—கல்விநிறை

ஔவையார்க் கோரிரவி லன்னமும் வத்திரமும்
செவ்வையா யீந்த திறத்தினர்—எவ்வமில்

கோவிந்த ராயருக்குக் கூறுதில்லை யிற்கோயில்
மாவிந்தம் போலியற்றி மன்னவைத்தோர்—மேவுமந்தத்

தில்லைத் தலத்திற் றினமன்னந் தந்திடற்கு
நல்லமடங் கட்டிவைத்த நன்மையோர்—சொல்லரிய

வேடிக்கை யாகப்பால் வெண்ணெயுண்ட மாயவனைச்
சாடிக்குண் மூடிவரந் தான்பெற்றோர்—நீடிய

உல்லாச மாகவே யோதுநல்லான் கோவையை
எல்லாருங் காணவரங் கேற்றினோர்—நல்லோர்கள்

துன்னுங் கவிஞர் துதித்யாகர் கோவையை
மன்னு மரங்கேற்றி வைத்திட்டோர்—உன்னுகின்ற

அவ்வையார் சொன்ன வசதிக்கோ வைதன்னை
செவ்வையாய்ப் பெற்றுமகிழ் சீர்த்தியோர்—ஒவ்வுநந்த

மண்டலத்துக் கோர்சதக மாதுருநூ தையர்தம்பாற்
கொண்டலகி லாப்பொன் கொடுத்திட்டோர்—கண்டுமொழி

தேஞ்சார் நகிலங் திகழ்பெருந் தேவியார்
வாஞ்சை யுடனேவாழ் வரதருக்குக்—காஞ்சிதனில்

மாமதிலுங் கோபுரமு மண்டபமும் வாவியுமிப்
பூமதிக்கச் செய்துவைத்த புண்ணியத்தோர்—காமருவு

நூற்றெண் டிருப்பதிக்கு நூற்றுப்பத் தெண்பதெனும்
ஏற்றமுறும் பசுக்க ளீந்திட்டோர்—சாற்றரிய

நேரில் நவக்கிரக நேர்படவே பூசைசெய்து
பாரில்மழை பெயச்செய் பக்குவத்தோர்—சீரிய

சீதனமாப் பொன்னாடு சேரன் கொடுத்திடவே
மாதனமாக் கொண்ட வளமையோர்—ஓதனமா

வன்புலிக்குச் சொல்லிவந்த வாசகம்பொய் யாக்கபிலை
இன்புறவே காக்கு மினிமையோர்—முன்பொருவன்

மேலான் தன்மம் விளங்கக் குளத்துலக்கை
வாளா லெறிந்துவிட்ட வண்பசுவார்—கோலான

நாவற் கனிவிற்று நன்கிழவி கூடைநிறை
ஆவறரு மாணிக்க மாக்குவித்தோர்—தேவர்கட்

கற்றை நாணல்ல அமிர்தீர்ந்தோர் போல்மனிதர்க்
கிற்றைநாட் பாலமிர்த மீகுவோர்—கற்றையார்

பொன்சடிலற் போற்றிப் புகழ்சநிப்ர தோடத்தில்
புன்குடிலைப் பொன்குடில்செய் போதத்தோர்—நன்குற்ற

பட்டீச் சுரத்தரற்குப் பாற்காசுத் திவ்யகுடஞ்
சுட்டீந்து பேர்பெற்ற தூய்மையோர்—இட்டமொடு

சொக்கரிடஞ் செல்லவழி சொல்லென்ற பாவலர்பால்
தக்ககவி பெற்றுவழி சாற்றினோர்—பக்கமுடன்

கண்ணபிரா னுக்கொளிசெய் காதணியு மென்கரத்திற்
கெண்ணரிய கங்கணமு மிட்டணிந்தோர்—விண்ணவர்சூழ்

சீரங்க நாதருக்குத் தீவர்த்தி தாமொளிர
ஏரங்கச் சேதாநெய் யீந்திடுவோர்—பாரெங்குந்

திகழவ் வரங்கத்துச் செய்யும் விழாவிற்
புகழன்ன தானம் புரிவோர்—நிகழ்கின்ற

கொம்பிற்குக் குப்பிகளுங் கூறடிக்குக் குளம்பும்
அம்பொனினாற்செய் தலங்கரித்தே—சம்ப்ரமமாய்

பத்திரட்டி யாயிரநற் பாற்பசுக்க ளந்தணர்க்கு
நத்தன் பிறந்தநாள் நல்கினோர்—சுத்த

மறையோர் முதலியோர் மாமகஞ் செய்யக்
கறையில் பசுநல்குங் கையார்—அறையும்

ஒருங்கல்லல் தீர்க்குமெவ்வு ளூர்த்தெருவில் தேர்க்காக்
கருங்கல் லமைத்துக் களித்தோர்— தருங்கல்வி

தன்னிலையைத் தானுணருந் தாயவ்வை யாருக்குப்
பொன்னிலையி லன்னமிட்ட பொற்கரத்தார்—மன்னுமலை

வையா வூரிற்பேசு மாலடியைப் பூசித்து
மெய்யாகக் கண்பெற்ற மேன்மையோர்—வையகத்தில்

ஓங்குதிரு நீர்மலையில் ஒண்கருட சேவையென்றும்
பாங்குடனே செய்துவரும் பண்புடையோர்—தேங்குபுகழ்.

ஆக்கம் பெறுமா லருள்சேர் கசேந்திர
மோக்க மதனை மொழிந்திட்டோர்—வாக்கரிய

நாகவணை யான்சீர் நவிலுமே ழாயிரப்பாப்
பாகவதந் தன்னைப் பகர்ந்திட்டோர்—ஓகையுடன்

உம்பரார் போற்று முயரெம் பிரான்சதகம்
இம்பரார் போற்ற இயம்பினோர்—அம்புவியில்

வெஞ்சிறை யாருமொரு வேதியனை யோர்பசுவீந்
தஞ்சலென மீட்டருளும் ஆற்றலோர்—விஞ்சுபுகழ்

மானவர்கள் கொண்டாட வண்காம தேனுவினை
வானவர்க்கு முன்னம் வலிதளித்தோர்—கானகத்தில்

சட்டைக் கடைந்து கனலெடுத்து மாமனுவிற்
கிட்டமுட னளித்த ஈகையோர்—மட்டில்லா

முக்கிய சாலக்ராம முன்னுகின்ற பாவிவிட்டு
தக்கபெய ரளிக்குந் தண்ணளியோர்—இக்குவில்

காட்சியாய் சேய்புகர்க்குக் கண்ணோர் தகரேறை
ஆட்சி யுறவே யமைத்திட்டோர்—நீட்சியா

எண்ணியகார் யத்தெவரு மேத்துபிள்ளை யார்பிடிக்கப்
புண்ணிய சாங்கங்கொடுக்கும் புத்தியுள்ளோர்—கண்ணியே

சோமசுந்த ரேசனடி சூழ்வோர் புணைகின்ற
ஏமத்திற்குச் சாந்தம் ஈகுவோர்—காமாய்

தொழுவோர் பசிநீக்கத் தூயபயிர் செய்யும்
உழுவோர்க் கெருதீந் துவப்போர்—வழுவில்லாத்

தண்கிணற்று நீர்புன்செய் சார்ந்துபயி ரோங்குதற்கு
வண்கவலைக் குண்டை மதித்திவோர்—நண்புடனே

பேசருமூ ரெங்கும்போய் பிட்சைகொண் டேபெருமாள்
தாசருய்ய மாடுதருஞ் சம்பத்தோர்—பாசமுடன்

கோசலமுங் கோமயமுங் கூறில்லஞ் சுத்தமுற
மாசகல நாளும் வழங்குவோர்—ஆசில்

இது நூறுபாட்டாகையால் இருந்தவரை அச்சிட்டிருக்கிறது.

கோவைசியமாலை—முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

## ஆயர்கள்பேரில் அன்புமேலிட்டு

ஔவையாரருளிச்செய்த

# அசதிக்கோவை.

முல்லைவனத்தின்கண் சஞ்சரித்துலவும் கோகுலவாசியாகிய கோபாலர் வம்சத்திலவதரித்த யாதவர்களிற் சிலர் பசுக்கிடைகள் போட்டு வசித்துவந்தனர். அக்கால் கவீஸ்வரியாகிய ஔவையார் அவ்வழிமார்க்கமாய் வரும்பொழுது சூரியனஸ்தமானமாய் விட்டதின்பேரில் ஆங்குள்ள பசுக்கிடைக்காரர்களாகிய யாதவாளை நோக்கி அதிகபசியால் பசும்பால் வேணுமென்றுகேட்க. அவர்கள் ஔவையாரைமிகவும் உபசரித்து பாலுமன்னமுங் கொடுத்ததின்பேரில் ஔவை சாப்பிட்டு சந்தோஷமடைந்து யாதவர்கள்பேரில் கோவைத்துரை சொல்லவேண்டுமென்றுகருதி சயனித்திருந்த யாதவர்களையெழுப்பி உங்கள் நாமதேயமென்னவென்று கேட்டதின்பேரில் யாதவாள் பகல்முழுவதும் காடுகளிலலைந்தவரானதால் அம்மா அசதி யென்றுசொல்ல, ஔவை பெயரே அசதிதானென்று நினைத்து உடனே யாதவாள்பேரில் அசதிக்கோவை ஒன்று சொல்லிமுடித்து கொடுத்துவிட்டு சூரிய உதயமானவுடன் நகரம்வந்து சேர்ந்தனள். அக்கோவைகளில் அகப்பட்டவை அச்சிட்டிருக்கிறது. இன்னும் அகப்படாத சிலபாடல்கள் பலவிடங்களிலிருப்பதாககேழ்வி அது கிடைத்தவுடன் பின்னால் அச்சிட்டு வெளிப்படுத்த தயார்.

அற்றாங் கியகரத் தைவே லசதி யணிவரைமேன்
முற்றா முகிழ்கொங்கை யெவ்வாறு சென்றனள் முத்தமிணூற்
கற்றார் பிரிவுங்கல் லாதவ ரிட்டமுங் கைப்பொருள்க
ளற்றா ரிளமையும் போலே கொதிக்கு மருஞ்சுரமே. (1)

அழற்கட்டு கட்டிய வைவே லசதி யணிவரையின்
மழைக்கட்டு கட்டிய மாளிகை மேலொரு மங்கைநல்லா
ளுழக்கிட் டரியிட்டு முவ்வுழக் கிட்டரி நாழியிட்டு
குழற்கட் டவிழ்த்துட னங்ஙனின் றேமயிர் கோதினளே. (2)

ஆலவட் டப்பிறை யைவே லசதி யணிவரைமே
னீலவட் டக்கண்க ணோரொக்கும் போதந்த நேரிழையாண்
மாலைவிட் டுச்சுற்றி வட்டமிட் டோடி வரவணைத்து
வேலைவிட் டுக்குத்தி வெட்டுவ ளாகில் விலக்கரிதே. (3)

ஆரா யிரங்கொண்ட வைவே லசதி யகன் கிரியி
னீராடப் போகு நெறிதனியே யந்தி நேரத்திலே
சீரான குங்குமச் செங்கையை நீட்டிச் சிரித்தொருபெண்
போராள் பிடிபிடி யென்றே நிலாவும் புறப்பட்டதே. (4)

ஸ்ரீராமஜெயம்.

## திருப்பதிமலையில் மேலரதவீதியில்

### யாதவ கோபால இராமானுஜகூட

# ததியாராதனைப் பத்திரிகை.

சென்னை-600 00

ஸ்ரீயப்பதியாய், ஸ்ரீவைகுண்டவாசகராய், அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராய், அகிலலோகேசராய், அனந்தகல்யாணகுண ரக்ஷகராய், தன்குக்ஷிக்குள்வைத்து ரக்ஷித்திடுங்கர்த்தராய் திருப்பதி வெங்கிடேஸ்பராய் யெழுந்தருளிய எம்பெருமான் திருவருளை முன்னிட்டு திருப்பதிமலைமேல் அனேகர் மடாலயங்கட்டி ததியாராதனைநடாத்தி மோக்ஷார்த்தத்தை யடைந்துவருவது யாவருக்குந் தெரிந்தவிஷயமே. அதில் யாதவகுலத்தோருக்கு இராமானுஜகூடமும், ததியாராதனைத்தருமமுமிருக்க வேணுமென்றும் யாதவர்களனேகருக்கு இந்தஞாபகமொன்று வருத்திக்கொண்டேயிருந்தது. அடியேன் ஒருககால் பெருமாளை சேவிக்க வந்திருக்கும்பொழுது அனேக யாதவர்களொன்றுசேர்ந்து எங்களாலியன்ற பொருளுதவிசெய்கிறோம் இராமானுஜகூடமுங்கட்டி ததியாராதனையும் நடத்திவைக்கவேணுமென்று சொல்லியபிரகாரம் பலதேசங்களிற் சென்று யாதவர்களிடத்திற்பொருளுதவிபெற்று, அடியேனுடைய பொருளுஞ்சேர்த்து திருப்பதிமலைமேல் மேலரதவீதியில் கிழ்சரகில் (21—9—908-க்கு) கீலகஹு புரட்டாசிமீ 6உ மனைக்கிரயம் பெற்று யாதவர்களுடைய பொருளுதவியினாற் கட்டடங்கட்டி யாதவ கோபால இராமானுஜகூடமெனப் பெயரமைத்து யாதவர்கள் யாவருக்குஞ்சொந்தமென்றுரிஜிஸ்டர்செய்திருக்கிறது. ஆகையால் நமது யாதவர்கள் எவ்வளவுபேர் வந்தபோதிலும் இருந்து சாகை செய்துக்கொண்டு பெருமாளை சேவிக்க நல்லயிடமாய்விட்டது. ததியாராதனைத்தளிகை யாதவர்களுக்கு பொருத்தமாகையால் இதை யாதவர்களே செய்யவேணுமென்றநோக்கத்தோடு வருடந்தோறும் பலதேசங்களிலுஞ்சென்று இயன்ற பொருளுதவியைப்பெற்று ததியாராதனைத்தளிகை நடந்தேரிவருகிறது. இது எந்தக்காலத்திலும் வம்சபாரம்பரையாய் நடந்தேருவதற்கு பண்டுகள்சேர்த்து கிராமங்கள்வாங்கி வரும்படிசெய்து ஷை தருமத்தை நடத்துவதற்கு அனேககனவான்கள் தகுதியான ஏற்பாடுசெய்திருக்கிறார்கள் அத்துடன் எல்லோருங்கூடினால் வருஷசந்தாவசூலுக்கு அலையாமல் ததியாராதனைத்தருமம் நடந்தேரிவரும். ஆகையால் ஒவ்வொரு மகான்களும் பண்டுசேர்த்து நிலம்வாங்கிவிடும்படி ரெம்ப வந்தனத்தோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்.

ஸ்ரீரங்கம் பெரியகோவில், ஸ்ரீமான் ஆயனார் ஆசார்ய
சுவாமிகளின் திருவடிசம்பந்தராகிய
கும்பகோணம் யாதவதாஸாங்கம்

**நா. ஜெகந்நாத இராமானுஜம்பிள்ளை.**

# யாதவர்களுக்கு ஏற்பட்டுவருகிற பெயர்கள்.

அமுதர்—அமுதம்-பால், பாலுடையவராகையால் அமுதரெனக் கூறுவர்.

அண்டர்—அண்டரிஷியின் சந்ததியில்வந்தவர் - அண்டரென்னுந் தேவர்களே யுருப்பிற்கொண்ட பசுவை காப்போராகையால் அண்டரெனக்கூறுவர்.

ஆயர்—ஆயம்-பம்பைவாத்தியம், பம்பைவாத்தியத்திற்பிரியமுடையவர். ஆயம் - தாய், தாய்போலும் பால் முதலியது கொடுத்து காப்போராகையால் ஆயரெனக்கூறுவர்.

இடையர்—இடை-மடி மடியிலுண்டானதுபால். பாலுக்குசொந்தமானவர். இடை நாலுக்குமத்தியிலுள்ளது இடையாகையால் இடையரெனக்கூறுவர்.

கரையாளர்—கரை-பங்கு, ஆளர்-ஆள்பவர், கோபாலராகையால், கரையாளரெனக்கூறுவர்.

கோன்—கோ-பசு, பசுவையுடையோர். கோன் என்பது-அரசனுக்கும் பொருள் யாதவர்களிலனேகர் அரசனாயிருந்ததால் கோனென்று கூறலானது.

கோபாலர்—கோ-பசு, பாலர்-பிள்ளைகள் , இடையர்களாகையால் கோபாலரெனக்கூறுவர்.

கோவைசியர்—கோ-பசு, பசுவைகாப்போர் வைசியர் முப்பிரிவின் முதன்மையோராகையால்கோவைசியரெனக்கூறுவர்

கோகுலர்—கோ-பசு, பசுக்கூட்டம் அதைகாப்பவராகையால் கோகுலரெனக்கூறுவர்.

நந்தகோன்—இடையர்களுக்கரசன்-கண்ணனை வளர்த்தவராகையால் நந்தகோனெனக் கூறலாயிற்று.

நம்பி—நம்பியென்பது-மஹாவிஷ்ணுக்கு அடிமைபட்டவர் யாதவர்களாகையால் நம்பியெனக்கூறலாயிற்று.

பிள்ளை—கோ-பசு, பாலர்-பிள்ளையென்றபட்டங் கிடைத்ததாலும் கண்ணனை நந்தகோன்பிள்ளையென அழைத்ததாலும் பிள்ளையெனக்கூறுவர்.

பொதுவர்—பொதுநிலத்திருப்போராதலால பொதுவரெனவும், நடுநிலைமைபற்றி ஞாயம் பேசுதலால் பொதுவரெனக் கூறுவர்.

யாதவர்—யாதவம்-பசு, பசுக்களையுடையவர்-இடையர், கிருஷ்ணனைவளர்த்தவர், கிருஷ்ணன் யாதவனாகையால் இடையர்களுக்கும் யாதவரென்ற பட்டங்கிடைத்தது.

---